பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 09 2026** **MONDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தில்லியில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட அனைத்து ஐந்து மாடி கட்டிடங்களுக்கும் சீல் வைக்க தில்லி அரசு உத்தரவிட்டுள்ளது.

2. பஞ்சாப், ஹரியானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு அஷ்வினி குமார் மிஸ்ரா இன்று பதவியேற்றார்.

3. தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

4. **Sukhoi - 30** ரக போர் விமானங்களில் நவீன ஏவுகணைகளை இணைப்பது குறித்து ரஷ்யாவுடன் ஆலோசனை மேற்கொள்ளப் போவதாக இந்திய விமானப்படை அறிவித்துள்ளது.

5. திலிப் கோப்பை கிரிக்கெட் போட்டியின் தென் மண்டல அணிக்கு எதிரான இறுதியாட்டத்தில், கிழக்கு மண்டல அணி வலுவான நிலையில் உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

தில்லியில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட அனைத்து ஐந்து மாடி கட்டிடங்களுக்கும் சீல் வைக்க தில்லி அரசு உத்தரவிட்டுள்ளது.

தில்லி சத்தியநிகேதனில் கட்டிடம் இடிந்து விபத்துக்குள்ளானதையடுத்து, இதுதொடர்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தில்லி அரசு தெரிவித்துள்ளது.

முன்னதாக, தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, அமைச்சர் திரு **Manjinder Singh** ஆகியோர் சத்தியநிகேதன் பகுதியில் கட்டிடம் இடிந்து விபத்துக்குள்ளான பகுதியை இன்று பார்வையிட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி ரேகா குப்தா, **80** சதவீதம் இடிபாடுகள் அகற்றப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த விபத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளதாகவும், **6** பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களிடம் அரசு தொடர்புகொண்டு இருப்பதாக அவர் கூறினார்.

இதுதொடர்பாக, கட்டிட உரிமையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு **Manjinder Singh,** தேசிய பேரிடர் மீட்புப் படை மீட்புப்பணியில் ஈடுபட்டு வருவதாக கூறினார்.

இதில் தொடர்புடைய அலுவலர்களை உடனடியாக பணியிடை நீக்கம் செய்ய முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பஞ்சாப், ஹரியானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு அஷ்வினி குமார் மிஸ்ரா இன்று பதவியேற்றார்.

சண்டிகர் மக்கள் மாளிகையில் நடைபெற்ற விழாவில், பஞ்சாப் ஆளுநர் திரு **Gulab Chand Kataria** அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

கடந்த ஜூன் மாதத்தில் இருந்து பஞ்சாப், ஹரியானா உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக திரு அஷ்வினி குமார் மிஸ்ரா பதவி வகித்திருந்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்

சட்டப்பேரவையில் இன்று காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் குறித்த மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கை பாதுகாக்கும் வகையில் குற்றங்களை தடுப்பதுடன், குற்றவாளிகள் மீது வழக்குகளை உடனடியாக பதிவு செய்வதாக அவர் கூறினார்.

குற்றங்கள் நடைபெறும் இடங்களில், குற்றவாளிகள் குறித்த துல்லியமான விவரங்களை சேகரித்து, அதற்கான பட்டியல் தயாரிக்கப்படுவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

அரசு அலுவலங்களில் பணிபுரிவோர் நேர்மையுடன் நடந்துகொள்ளும் வகையில், ஊழல் தடுப்பு கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

போதையில்லா தமிழகத்தை உருவாக்குவதே தமது அரசின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

சிங்கப்பெண் அதிரடிப்படையின் மூலம் பெண்கள் மீதான வன்முறை சம்பவங்களில் துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறிய முதலமைச்சர், தேசிய மனிதஉரிமை ஆணையம் விதித்துள்ள நெறிமுறைகளின் அடிப்படையிலேயே குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

குற்றவாளிகள் எந்த கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதில் அரசு தவறிவில்லை என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

கருத்துரிமை சுதந்திரம் என்ற பெயரில் பெண்கள் மீதான தரக்குறைவான விமர்சனங்களில் ஈடுபடவேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்த முதலமைச்சர், தனிப்பட்ட முறையில் அவர்கள் மீது அவதூறு பேசினால் சட்டம் தன்கடமையை செய்யும் என்று உறுதியளித்தார்.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தை ஆட்சி செய்த அரசின்மீதான முறைகேடுகள் தொடர்பான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் முதலமைச்சர் சில குற்ற வழக்கின் விவரங்களையும் எடுத்துரைத்தார்.

அப்போது, திமுக உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர். எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

பதிலுரைக்கு பின்னர் வாய்ப்பு வழங்கப்படும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு ஜே சி டி பிரபாகர் அப்போது கூறினார்.

எனினும், திமுக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷிட்டனர்.

முதலமைச்சரின் உரையின்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக கேட்பதற்கு பதிலாக தொடர்ந்து குரல் எழுப்பியதால் பேசுவதற்கான வாய்ப்பு வழங்கப்படாது என்று கூறினார்.

இதனை எதிர்த்த திமுக-வினர் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் தரையில் அமர்ந்து கோஷம் எழுப்பினர்.

எனினும், முதலமைச்சர் திரு விஜய், எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று கூறியதன் அடிப்படையில், திமுக-வினர் அவர்களது இருக்கைக்கு சென்றனர்.

தொடர்ந்து பேசிய அவைத்தலைவர் திரு ஜே சி டி பிரபாகர், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்றும், அதற்கு முன்னதாக தாம் சில கருத்துகளை கூற வேண்டும் என்று முற்பட்டார்.

அப்போது, திமுக-வை சேர்ந்த சிலர் தொடர்ந்து குரல் எழுப்பியதால், வாய்ப்பு மீண்டும் மறுக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், திமுக-வினர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

<<<<<<>>>>>>

**Sukhoi - 30** ரக போர் விமானங்களின் நவீன ஏவுகணைகளை இணைப்பது குறித்து ரஷ்யாவுடன் ஆலோசனை மேற்கொள்ளப் போவதாக இந்திய விமானப்படை அறிவித்துள்ளது.

ரஷ்யா தொழில்நுட்பத்துடன் கூடிய **RVV BD** ஏவுகணை **300** கிலோமீட்டர் தூர இலக்கை தாக்கும் திறன் கொண்டவை என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சகம் இதுகுறித்து இன்று ஆலோசனை மேற்கொள்ள உள்ளது.

இந்திய விமானப்படையின் ஏவுகணை திறனை மேம்படுத்த பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

முன்னதாக, பிரான்ஸ் நாட்டிலிருந்து **Meteor** ஏவுகணைகளை வாங்க இந்திய விமானப்படை முடிவு செய்துள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் கடலூர் மாவட்டத்தில் மத்திய அரசின் மை பாரத் திட்டம் மூலம் பல்வேறு போட்டிகளில் இளைஞர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்று மாவட்ட இளையோர் நலன் அலுவலர் திரு மதியழகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

வரும் **2047**-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்று எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — மதியழகன் - 52 Sec. )***

<<<<<<>>>>>>

இந்தியா — பங்களாதேஷ் இடையே கலாச்சார உறவுகள் மேம்படுத்தப்படும் என்று அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு தினேஷ் திரிவேதி தெரிவித்துள்ளார்.

டாக்காவில் பங்களாதேஷ் கலாச்சார விவகாரத்துறை அமைச்சர் **Nitai Roy Choudhary**-யுடன் இதுதொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார்.

இருநாட்டு மக்களிடையே கலாச்சார பரிமாற்றம் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

அம்ரிட்சர் விமான நிலையத்தில் ட்ரோன்கள் பறந்ததையடுத்து, விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு விமான நிலைய பகுதியில் ட்ரோன்கள் கண்டறியப்பட்டதையடுத்து, ஏழு விமானங்கள் பிற விமான

நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அம்ரிட்சர் விமான நிலைய இயக்குநர் திரு அனிருத் குமார் சர்மா தெரிவித்துள்ளார்.

அம்ரிட்சரில் தரையிறங்க வேண்டிய இரண்டு விமானங்கள் சண்டிகர் விமான நிலையத்திற்கும், ஐந்து விமானங்கள் தில்லி விமான நிலையத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதுதொடர்பாக, விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் உஜ்ஜைனியில் மகா காலேஸ்வர் திருக்கோயில் விழா இன்று நடைபெறுகிறது.

கோயில் ஊர்வலத்தில் மகா காலேஸ்வர் 7 உருவங்களில் காட்சி அளிக்க உள்ளார்.

மாலை 4 மணிக்கு தொடங்க இருக்கும் ஊர்வலம் **Mahakal Ghati, Gudari, Ramanuj kot** வழியாக ராம் படித்துறையில் சென்றடைய உள்ளது.

ராம் படித்துறை அருகே ஷிப்ரா ஆற்றில் சந்திர மௌலீஸ்வர், மன் மகேஷ் சிலைகளுக்கு புனித நீராடல் அபிஷேகம் செய்யப்பட உள்ளது.

<<<<<<>>>>>>

அமெரிக்காவின் **Miami** சர்வதேச விமானநிலையத்தில் சரக்கு விமானம் விபத்துக்குள்ளானதில் **5** பேர் உயிரிழந்தனர்.

**Puerto Rico**-வின் **San Juan** விமானநிலையத்தில் இருந்து மியாமி வந்த ஆமசன் பிரைம் சரக்கு விமானம் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளானது.

படுகாயம் அடைந்த **3** பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

திலிப் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தின் இரண்டாவது நாளான இன்று தென் மண்டல அணிக்கு எதிராக முதலில் பேட் செய்துவரும் கிழக்கு மண்டல அணி உணவு இடைவேளையின்போது ஐந்து விக்கெட் இழப்பிற்கு **491** ரன் எடுத்துள்ளது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் கிழக்கு மண்டல அணித்தலைவர் இஷான் கிஷன் அபாரமாக ஆடி **171** ரன்னுடன் களத்தில் உள்ளார்.

<<<<<<**END**>>>>>>